## ஆய்வுப்பொருள்: ஒன்று:-
## உலகில் வெளிப்படும் இறைச் செயற்பாடு

7

# 1.7. கிறிஸ்துவின் ஆட்சியுரிமையில் பங்கேற்போம் பணி பெற அல்ல - பணி புரியவே

### சகோதர உயர்வே உயர்வின் வழி



தேவா உந்தன் பலியாக என்னை தந்தேன்
என்றும் உந்தன் பணி வாழ்வை ஏற்றிடுவாய் } 2

அன்பொன்றை தினம் தேடி அலைகின்ற
நெஞ்சங்கள் வீதியில் ஆயிரமே
அரவணைக்கும் கரம் தேடி ஆர்வமுடன் காத்திருக்கும்
மனிதர்கள் கூட்டம் இங்கு - அன்பொன்றை

அன்போடு நான் வாழுவேன் சிந்தும் கண்ணீரை நான் மாற்றுவேன் - 2
நல்ல அன்பைதேடி புவிமாந்தர் வாழ என் வாழ்வை பலியாக்குவேன் - 2

தேவா



இலவச விநியோகத்திற்காக

விடியாத பொழுதென்று வீங்கிடும் விழியோடு ஏங்கிடும் மாந்தர் இங்கு
முடியாது என்று எண்ணி முகம் சோர்ந்து போகும்
பரிதாப வாழ்க்கை இங்கு - விடியாதோ

தேவா நான் சுடராகுவேன் - எங்கும் நம்பிக்கை ஒளியேற்றுவேன் - 2
போராடும் நெஞ்சில் போராட்டம் தீர்க்க என்வாழ்வை பலியாக்குவேன் -2

(இறைவனில் இணையும் இதயங்கள் # *130*)

- இப்பாடலை எல்லோரும் சேர்ந்து பாடவும்.
- ஐவர் கொண்ட குழுக்களாகப் பிரித்து பின்வருவனவற்றைப் பற்றிக் கலந்துரையாடவும்.
    1. படைத்தவர் படைப்பின் பாதங்களைக் கழுவுதல்.
    2. இப்பாடலுக்கமைய எமது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும் முறைகள்.
    3. இறை உறவில் நிலைபெற நீர் செய்யக்கூடியவை எவை?
- கலந்துரையாடலில் எழும் கருத்துக்களை வகுப்பு மாணவர்களுடன் பகிரவும்.

**உலக அரசுகள் தோன்றுகின்றன, அழிந்து போகின்றன. அரசுகள் எழுவதும் விழுவதும் உலக வரலாற்றின் நடப்பு முறை.**

**காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டிருக்கும் அரசுகள், ஆட்சிகள் மத்தியில் கால, எல்லை வரையறைகளைக் கடந்து வளர்வது இறையரசு.**

தொடக்கமும் (அல்(f)பாவும் - ***A***) முடிவுமாக (ஒமேகாவுமாக - **Ω**) இருக்கின்ற கிறிஸ்துவின் அரசோ மிலேனியங்களைக் கடந்தும் இளமைப் பொலிவுடன் அரசாள்வது கண்கூடு. மனித வல்லமையை நம்பி அதிகாரம் செலுத்தப் புறப்பட்ட அரசுகளெல்லாம் இருப்பிழந்து போக அன்பின் அரசாம் இறையரசு மாத்திரம் கொலு வீற்றிருக்கிறது. இவ் அரசைப்பற்றி நாத்தான் இறைவாக்கினர் தாவீது அரசனுக்கு வழங்கிய செய்தியில் வெளிப்படுத்தியுள்ளார்.



இலவச விநியோகத்திற்காக

உன் வாழ்நாள்கள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில் கொள்ளும்போது, உனக்குப் பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப்பின் நான் உயர்த்தி, அவனது அரசை நான் நிலைநாட்டுவேன். எனது பெயருக்காக கோவில் கட்டவிருப்பவன் அவனே. அவனது அரசை நான் என்றும் நிலைநிறுத்துவேன். நான் அவனுக்குத் தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். அவன் தவறுசெய்யும்போது மனித இயல்புக்கேற்ப அடித்து, மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன். உன் முன்பாக நான் சவுலை விலக்கியதுபோல, என் பேரன்பினின்று அவனை விலக்க மாட்டேன். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்.

(2சாமு. 7:12-16)

மனிதனின் வல்லமை, மனிதத் திறமை ஆகியவற்றில் மட்டும் நம்பிக்கை கொண்டு இயங்கும் அரசு அழிந்து விடும். ஆனால், அன்பினால் ஆளப்படும் அரசு என்றென்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறே மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.

(மத். 20:28)



இலவச விநியோகத்திற்காக

நான் உங்களிடையே பணிவிடை பெறுபவனாக அல்ல, பணிவிடை புரிபவனாகவே வாழ்ந்தேன் என்று கூறும் இயேசு தாழ்ச்சி நிறைந்த சேவை மனப்பான்மையை அறிகிறோம். கிறிஸ்தவ வாழ்வு நிறைவு பெறுகின்ற அளவிற்கு சேவை மனப்பான்மையை எம்மிடையே வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஏறத்தாழ 2700 ஆண்டுகளுக்கு முன் எசாயா இறைவாக்கினர் இயேசுவைப் பற்றியும் அவரது சேவையின் தன்மை பற்றியும் வெளிப்படுத்தியதைப் பார்ப்போம்.

இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் நான் தேர்ந்துகொண்டவர் அவர் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன் அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் கூக்குரலிடமாட்டார் தம் குரலை உயர்த்தமாட்டார் தம் குரலொலியைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நெரிந்த நாணலை முறியார் மங்கி எரியும் திரியை அணையார் உண்மையாகவே நீதியை நிலை நாட்டுவார். உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார் மனம் தளரமாட்டார். அவரது நீதிநெறிக்காகத் தீவு நாட்டினர் காத்திருப்பர். விண்ணுலகைப் பரப்பி உயிரினங்களைத் தோன்றச் செய்து, அதன் மக்களுக்கு உயிர்மூச்சு தந்து, அதில் நடமாடுவோர்க்கு ஆவியை அளித்தவருமான இறைவனாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன்; உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன்; மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்.

(எசா. 42:1-7)



இலவச விநியோகத்திற்காக

**திருமுழுக்கு யோவானின் தந்தை செக்கரியா தூய ஆவியின் தூண்டுதலால் இறைவாக்குரைத்தார்.**



இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர் தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தார். தம் தூய இறைவாக்கினர் வாயினால் தொடக்க முதல் அவர் மொழிந்தபடியே அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்றச் செய்தார் நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார். அவர் நம் மூதாதையருக்கு இரக்கம் காட்டி, தமது தூய உடன்படிக்கையையும், நம் தந்தையாகிய ஆபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையையும் நிறைவேற்ற நினைவு கூர்ந்தார். இவ்வாறு நாம் பகைவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தூய்மையோடும் நேர்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்சமின்றி அவர் திருமுன் பணிசெய்யுமாறு வழிவகுத்தார். குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய்; ஏனெனில் பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர் தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய். இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது.”

(லூக். 1:68-79)



இலவச விநியோகத்திற்காக

**இவ்வாறே, அன்னை மரியாவும் இயேசுவில் நிறைவுபெறும் இறையரசை அடையாளம் காட்டி இவ்வாறு பாடுகின்றார்.**



அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்; தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்.

(லூக். 1:50-55)



இலவச விநியோகத்திற்காக

**நாசரேத்து இயேசுவின் போதனையின் மையப்பொருள் இறையரசே! விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியன இறையரசின் அடிப்படைப் பண்புகளாகின்றன.**

**இறையரசுக்குட்பட்டோரைப் பற்றி மலைப்பொழிவில் எடுத்தியம்புகிறார்.**



ஆண்டவரின் அரசு அன்பின் அரசு. பணிவிடை புரியும் அரசு. தன்னலம் கருதா தனிநிகர் அரசு.

அதே அரசில் உரிமைக் குடிமக்களாக இருக்கின்ற நாம் ஒவ்வொருவரும் இறையரசின் உரிமைகளை அனுபவிக்கவும் கடைமைகளை நிறைவேற்றவும் அழைப்புப் பெற்றிருக்கிறோம். இறையரசை நிறுவிய இயேசுவின் பாதம் கழுவும் முன்மாதிரிகை எம்மையும் அவரது அரசுரிமையில் உடன் பங்காளிகளாக்குகின்றது.

ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும். . .

(லூக். 4:18)



இலவச விநியோகத்திற்காக

## என் வாழ்வில்

இவை யாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார்.

(2கொரி. 5:18)

- **மனிதன் இறைவனுடன் ஒப்புரவாகுதல்.**
- **மனிதன் மனிதனுடன் ஒப்புரவாகுதல்.**
- **மனிதன் இயற்கையுடன் ஒப்புரவாகுதல்.**

இம்மூன்று கடமைகளும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக்கடமைகளை அன்புடன் ஏற்று நிறைவேற்றுவோம்.

### செயற்பாடு

- எசாயா 42: 1-7 இல் கூறப்படும் ஆண்டவரின் ஊழியரின் பண்புகளை உமது அப்பியாச நூலில் எழுதுக.

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................



இலவச விநியோகத்திற்காக

- லூக்கா 4:18-19ல் உள்ளபடி நீர் எவ்வாறு கிறிஸ்துவின் சீடராக செயற்படுவீர்?

- கீழே தரப்பட்டுள்ள இறைவார்த்தைகளை வாசித்து தியானிக்கவும்.
  - மத். 25:31-46
  - கொலோ. 1:15-20.
  - தி.வெ. 21:1-5.

மனுவுடலேற்ற
வார்த்தையானவரின் மறைபொருளில்தான்
மனிதனின் மறைபொருள் உண்மையாகவே விளக்கம்
பெறுகிறது.
உண்மையிலே, முதல் மனிதனாம் ஆதாம்,
வரவிருப்பவராக எதிர்பார்க்கப்பட்ட ஆண்டவர் கிறிஸ்துவின்
முன் அடையாளமாக இருந்தான் (உரோ 5:14).
புதிய ஆதாம் கிறிஸ்து,
தந்தையுடையவும் அவருடைய அன்பினுடையவும் மறைபொருளை வெளியிடுவதின்
வழியாக மனிதனை மனிதனுக்கே முழுவதும் வெளிப்படுத்தி,
அவனுடைய உன்னத அழைப்பை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

இத்துணை சீரும் சிறப்பும் மிக்கதே மனிதனின் மறைபொருள்.
இம்மறைபொருள் கிறிஸ்தவ வெளிப்பாட்டின் வழியாக விசுவாசிகளுக்குத்
தெளிவாகின்றது.
ஆக, துன்பம், சாவு ஆகியவற்றின் புதிர்
கிறிஸ்துவிலும் கிறிஸ்துவின் வழியேயும் விளக்கம் பெறுகிறது.
கிறிஸ்துவின் நற்செய்திக்குப் புறம்பே இப்புதிர் நம்மைத் திணறடித்து விடும்.
சாவைத் தம் சாவால் அழித்துக் கிறிஸ்து உயிர்த்துவிட்டார்.
நமக்கு வாழ்வை வளமாக வழங்கியுள்ளார்.
இவ்வாறு, மகனாகிய அவரில் நாமும் பிள்ளைகளாகியிருக்கிறோம்
எனவே நாமும் தூய ஆவியில் ‘‘அப்பா, தந்தாய்’’
(காண் உரோ 8:15 கலா 4:6 யோவா 1:12 1யோவா 3:1.)
என்று அழைக்கப் பேறுபெற்றோம்.

2ம் வத்திக்கான் சங்க ஏடு.
இன்றைய உலகில் திருச்சபை # 22


இலவச விநியோகத்திற்காக